தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, ஏப்ரல் 25, திங்கட்கிழமை
சித்திரை 12, பவ திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்."

தம் பசியைப் பொறுத்துக் கொள்பவர்களைவிட, பிறரின் பசியைப் போக்குபவர்களே சிறந்தவர்களாகக் கருதிப் போற்றப்படுவர்.

1. வினாக்கள் விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள், வினா எண் 361, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

361-

இராயக்கோட்டை வருவாய் பிர்க்காவை கிருஷ்ணகிரி வட்டத்துடன் இணைத்தல்

***20127-** திரு கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், இராயக்கோட்டை வருவாய் பிர்க்காவை கிருஷ்ணகிரி வட்டத்துடன் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராயக்கோட்டை வருவாய் பிர்க்கா என்பது கிருஷ்ணகிரியிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. ஆனால், அவர்கள் தேன்கனிக்கோட்டை செல்ல வேண்டுமென்றால் அங்கிருந்து 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதற்கு மேலாக, அந்தப் பக்கத்தில் தேன்கனிக்கோட்டை வரைக்கும் அங்கே இருப்பவர்கள் அனைவரும் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் பழக்கப்பட்டவர்கள். இங்கே இருப்பவர்கள் அனைவரும் தமிழ் மொழியில் பழக்கப்பட்டவர்கள். ஆகவே, இவர்கள் அங்கே போய் காரியங்களைச் செய்வதற்கு சிரமமாக இருப்பது மட்டுமல்லாமல், மிகவும் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இவர்கள் சிறந்த முறையிலே இங்கே வந்து காரியங்களைச் செய்வதற்கு கிருஷ்ணகிரிக்கு மாற்றுவதற்கு மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம் இப்பொழுதே பெரிய வட்டமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் கிருஷ்ணகிரி வட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலானவர்கள் தமிழ் பேசுகிறவர்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இடத்திலுள்ள பெரும்பாலானவர்கள் தெலுங்கு பேசுகிறவர்கள். அந்த ஒன்றியத்திலே அது இருப்பதுதான் இன்றைக்கு நலமாக இருக்கும். அவர்களுடைய எல்லாவிதமான நலன் கருதி இப்பொழுது இருப்பதில் எந்தவித மாற்றமும் செய்ய இயலாது. தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள 88 வருவாய் கிராமங்களில் ஏற்கெனவே 4 வருவாய் கிராமங்கள் இராயக்கோட்டை உள்வட்டத்திலிருந்து பாலக்கோடு வட்டத்திற்கு நிர்வாகம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி மாற்றப்பட்டுவிட்டது. இதனால் இராயக்கோட்டை உள்வட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம் மற்றும் குளமங்களம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் ஆட்சி எல்லைகளில் மாற்றம் ஏற்பட்டவுடன் இராயக்கோட்டை உள்வட்டம் சிறிதாகிவிட்டது. தற்போது, இராயக்கோட்டை உள்வட்டத்தில், இராயக்கோட்டை மற்றும் சுருள்கோட்டை கிராமங்கள் மட்டுமே கிருஷ்ணகிரியிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. இக்கிராமப் பொது மக்கள், அரசுப் பணி நிமித்தமாக கிருஷ்ணகிரி வட்டாட்சியர்

அலுவலகத்திற்கோ அல்லது கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கோ செல்ல வேண்டுமானால் 35 முதல் 50 கிலோ மீட்டர் வரை பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. குளமங்களம் ஊராட்சி ஒன்றியத்திற்குச் செல்ல வேண்டுமானால் 5 முதல் 20 கிலோ மீட்டர் தூரம்தான் பயணம் செய்ய வேண்டும். இதனால் பொது மக்களுக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லாததுடன், வசதியாகவுமுள்ளது. இராயக்கோட்டையிலுள்ள வட்டத்தை கிருஷ்ணகிரி வட்டத்துடன் இணைத்தால், பொது மக்களுக்கோ அல்லது நிர்வாகத்திற்கோ எவ்வித வசதியும் நேரிடாது. மேலும், இராயக்கோட்டை வட்டத்தில் 3 கிராமங்களைத் தவிர மீதமுள்ள கிராமங்களில் தெலுங்கு மொழி பேசும் மக்களே அதிகமாக உள்ளனர்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டம் இப்பொழுது பெரியதாக இருப்பது உண்மைதான். ஆனால், கிருஷ்ணகிரி வட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள் இந்த பட்ஜெட் கூட்டத்திலே. ஆகவே, இப்பொழுது கிருஷ்ணகிரி வட்டமானது சிறிய வட்டமாக மாறிவிட்டது. மேலும் அந்த இராயக்கோட்டை ரெவின்யூ முழுவதையும் மாற்ற முடியாவிட்டாலும் தொட்டசிம்மரனி பஞ்சாயத்து, கொப்பகரை பஞ்சாயத்து, மேடகிராமம் பஞ்சாயத்துக்களையாவது கிருஷ்ணகிரி வட்டத்தில் இணைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது இராயக்கோட்டை வட்டத்திலுள்ள கிராமங்களில், எந்தெந்தக் கிராமங்கள் கிருஷ்ணகிரி வட்டத்தில் சேர்ந்தால் அங்குள்ள மக்களுக்குப் பயனளிக்கும் என்று நிர்வாகம் கருதினாலும், நிர்வாகம் கருதாவிட்டாலும், அங்குள்ள பொது மக்கள் அதைக் கருதினால், பொது மக்கள் வேண்டுகோள் கொடுத்தால், அவர்களுடைய வேண்டுகோளை நடுநிலையாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 362, திரு. எம். ஆண்டிஅம்பலம் இருக்கையில் இல்லை.

வினா எண் 363, திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வினா எண் 364. திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.